(இ) திருவள்ளூர் ஸ்பீட் லீவர் தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலைநிறுத்தமும், உண்ணாநோன்பும்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி கோவிந்தராஜன் அவர்கள் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் அதில்.

"திருவள்ளூர் ஸ்பீட் லீவர் தொழிலாளர்கள் ஒப்பந்தப்படி அவர்களுக்குச் சேர வேண்டிய கூலி உயர்வு கிடைக்காததால் 200 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதுபற்றியும், திருவள்ளூரில் 3—7—1967 முதல் சங்கக் காரியதரிசி உட்பட பீடித் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்துவருவதைப்பற்றியும் விவாதிக்க." என்று கண்டிருக்கிறது.

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இந்த மன்ற மரபுப்படி அவ்வளவு முக்கியம் அல்லவென்று நினைக்கிறேன். உண்ணாநோன்பு என்ற காரணத்திற்காக இந்தப் பேரவை ஒத்திவைக்கப் பட மாட்டாது என்பதற்கு இந்த மன்றத்திலே மேற்கோள்கள் இருக்கின்றன. 15—7—1953-ல் சென்னை சுவாமி ஆயில் மில் தொழிலாளர்கள் உண்ணாநோன்பு பற்றி அனுமதி மறுத்தும், அடுத்து, 6—8—1954-ல் ஒன்றும், 25—11—1954-ல் ஒன்றும் அனுமதி மறுக்கப் பட்டுள்ளன. ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(உ.) அம்பத்தூர், ஊகாஸ்—டி.வி.எஸ். தொழிற்சாலையில் கதவடைப்பு.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத் துள்ளார்கள், அதில்

"அம்பத்தூர் சமீபம் பாடியிலுள்ள ஊகாஸ் டி.வி.எஸ். லிமிடெட் தொழிற்சாலையில் வேலை செய்யும், தொழிலாளர்களை, கம்பெனி முதலாளி ரௌடிகளை வைத்துத் தாக்கியதைப்பற்றியும், அது விஷயமாகப் பல முறை புகார் செய்தும் தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருந்து வருவதைப்பற்றியும், இப்போது மேற்படி தொழிற்சாலையை முதலாளி கதவடைப்புச் செய்துவிட்டு, மேலும் ரௌடிகளைக் கொண்டு தொழிலாளர்களைத் தாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள விஷயத்தைப்பற்றியும் விவாதிக்க." என்று கண்டிருக்கிறது.

கம்பெனி மூடுவதுபற்றி, சபையில் ஒத்திவைப்புக் கேட்டு, 12—12—1952-ல், 24—2—1954-ல் ஆக இப்படிப்பட்ட தீர்மானங்கள் வந்தன. இந்தக் காரணங்களுக்காகக் கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்திற்கும் அனுமதி தர மறுக்கிறேன்,